## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
## CC No.520/2025

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/ Pw1 |
| Name | : Senthilkumar |
| Father/Husband's Name | : Govindan |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06.03.2026.

**Accused absent.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மறைமலைநகரில் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 24.10.2025 ம் தேதி எங்கள் காவல்நிலையத்தில் பணியிலிருந்த போது, காலை 11.00 மணியளவில் ரோந்து பணியாக நானும், உதவி ஆய்வாளர் சுரேஷ்குமார், சுல்தான் கான் முதல்நிலை காவலர் ஆகியோர்களுடன் ரோந்து பணியாக மதுவிலக்கு மற்றும் கஞ்சா வேட்டையாக பனகோட்டுர் அருகே சென்ற போது, மேற்சொன்ன உதவி ஆய்வாளர் அவர்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், காலை 11.15 மணியளவில் சோதனைக்கான உபகரணங்களை எடுத்து கொண்டு, கண்காணித்த போது, ஒரு ஆண் நபர் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவரை எங்களை பார்த்தவுடன் ஓட முயற்சித்தவரை நாங்கள் மடக்கி பிடித்து விசாரித்த போது, முன்னுக்கு பின் முரணாக கூறியவரை பின்னர் தன் பெயர் சுரேஷ்குமார், த.பெ.சங்கர் என்று கூறிய எதிரியை பிடித்து விசாரணை செய்தோம். பின்னர், மேற்படி, எதிரியிடம் உதவி ஆய்வாளர் உங்களை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், உதவி ஆய்வாளர் எதிரி சுரேஷ்குமார் என்பவரை சோதனை செய்த போது, அவர் கருப்புநிற பிளாஸ்டிக் பேக்கில் வைத்திருந்த

எடை போட்டு பார்த்தபோது, 50 கிராம் அளவு கொண்ட கஞ்சாவை பச்சை நிறத்தில் ஒருவித நெடியுடன் கூடிய துர்வாசத்தில் இருந்ததை குறித்து கேட்டபோது, அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை விற்பதற்காக வைத்திருப்பதாக சொன்னார். அப்போது உதவி ஆய்வாளர் உரிய காரணம் கூறி, எதிரியை கைது செய்தபோது, எதிரி தான் வைத்திருந்த 50 கிராம் அளவு கொண்ட கஞ்சாவை உதவி ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கொடுக்க, அதை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அதற்கு நானும், சுல்தான் கான் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அது **அதசா.ஆ1** ஆக குறயீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் சேர்ந்து, எதிரியின் மீது NDPS சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

நாங்கள் சம்பவ இடம் செல்லும் போது, அரசு பொருளான எலெக்ட்ரிக் தராசு சம்பவ இடம் எடுத்து சென்றோம் என்றால் சரிதான். அவ்வாறு அரசு பொருளை காவல்நிலையத்திலிருந்து வெளியில் எடுத்து செல்லும் போது, பதிவேட்டில் குறிப்பு வைத்து தான் எடுத்து செல்ல வேண்டும் என்றால் அதை பற்றி உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். அவ்வாறு விசாரணையில் சொல்லவில்லை. அந்த மிஷினில் எவ்வளவு எடை பார்க்கலாம் என்றால் 1-2 கிலோ எடை போட்டு பார்க்கலாம். எதிரியிடம் சோதனை விதிமுறைகளை தமிழில் எழுதி சொல்லப்பட்டதா என்றால் சரிதான். சென்னையில் எவ்வளவு கஞ்சா வாங்கினார் என்ற விவரத்தை சொல்லவில்லை. அவர் எடுத்து கொடுத்த பொருள் கஞ்சா என்பதை எவ்வாறு தெரிந்து கொண்டோம் என்றால் உதவி ஆய்வாளர் கஞ்சா என்று சொன்னார், முகர்ந்து பார்த்து தெரிந்து கொண்டேன். நான் கஞ்சா தடவியல் நிபுணர் இல்லாததால், அது கஞ்சா என்று உறுதியாக என்னால் சொல்ல முடியாது. ஆஜர் எதிரியிடமிருந்து கஞ்சா கைப்பற்றவில்லை என்றாலும், அவ்வாறு கைப்பற்றி இருந்தால் தடவியலுக்கு அனுப்பி இருப்பேன் என்றாலும் அவ்வாறு அனுப்பப்பாததால் அது கஞ்சா இல்லை என்றால் சரியல்ல. அந்த பாலீத்தீன் பை 6 கிலோ வரை பிடிக்கும். பாலீத்தீன் பை எவ்வளவு எடை இருக்கும் என்றால் 1 கிராம் இருக்கும். அந்த பையுடன் தான் எடை போட்டு பார்க்கப்பட்டது. நான் முன்னுக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும், சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், எதிரியை கைது

**செய்யவில்லை என்றாலும் அவரிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றபடவில்லை என்றாலும் சரியல்ல.**

**மறு விசாரணை இல்லை.**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/- S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.